[1994 நவம்பர் 10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 99, டாக்டர் ஜெ. பரந்தாமன், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்.

99—

வாணியம்பாடி வட்டத்திலுள்ள ஆதி திராவிடர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குதல்.

***24587—டாக்டர் ஜெ. பரந்தாமன்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வாணியம்பாடி வட்டம், தேவலாபுரம் ஊராட்சி, எல். மாங்குப்பம் பாங்கிஷாப், வானகாரதோப்பு ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம்.

டாக்டர் ஜெ. பரந்தாமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட ஆதிதிராவிட மக்களின் அடிப்படை வசதிகளை ஆய்வு செய்து குறிப்பிட்ட காலத்திற்குள் நிறைவேற்றிட ஆணையிட்டும், எந்த ஆட்சியாளரும் பார்க்க மறுத்த, தர மறுத்த பட்டாவை புறம்போக்கு இடங்களில் வாழ்ந்து கொண்டிருக்கிற ஆதிதிராவிட மக்களுக்கு வழங்கி, பட்டா புரட்சி செய்த, தாழ்த்தப்பட்ட ஆதி திராவிட மக்களின் ஒரே இதய தெய்வம், காவல் தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு என் நன்றியைக் காணிக்கையாக்கி, (மேசையைத் தட்டும் ஒலி) தேவலாபுரம் ஊராட்சியைப் பொறுத்தவரையில், தோல் தொழில்களின் பெருநகரான ஆம்பூருக்கு சில அடி தூரத்தில் இதே பஞ்சாயத்தில் நிறைய தோல் தொழிற்சாலைகள் இருப்பதால், நிலத்தின் விலை மிக, மிக அதிகமாக இருப்பதால், நிலத்தின் உரிமையாளர்கள் மார்க்கெட் விலையை விட அரசு நிர்ணயிக்கிற விலை குறைவான விலையாக இருப்பதால் தர மறுக்கிறார்கள். தற்போது நீதிமன்றத் தடையாணையும் இருக்கிறது. மக்களைக் காப்பாற்ற டாக்டர் புரட்சித் தலைவி நீதிமன்றங்களைச்

சந்தித்து வழக்குகளில் எல்லாம்—காவிரிப் பிரச்சினையானாலும் சரி, 69 சதவீத இட ஒதுக்கீடு, பேரறிஞர் அண்ணா அவர்கள் குறித்த அவதூறு என்று அனைத்துப் பிரச்சினைகளிலும், தன் மதி நுட்பத்தால், 'வெர்சடைல் ஜீனியஸ்' என்று சொல்கிற அறிவின் திறமையால், நான் ஆணையிட்டால் அது நடந்துவிடும், நிச்சயம் நடந்து விடும் என்ற முறையில் வெற்றி பெற்றிருக்கிறார். அந்த வகையில் தேவலாபுரம் வீட்டு மனைப் பிரச்சினையில் நீதிமன்றத் தடை உத்தரவை நீக்கி, பட்டா வழங்க டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றத் தடையாணையை நீக்குவதற்கு, இதுபோன்ற நிகழ்வுகளில் அரசு பேச்சுவார்த்தை நடத்தி சுமூகமான முறையில் நடவடிக்கையெடுக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆலோசனை வழங்கி இருக்கிறார்கள். அந்த ஆலோசனைக்கேற்ப சட்டமன்ற உறுப்பினருடைய கோரிக்கை நிறைவேற்றி வைக்கப்படும். அதுமட்டுமல்லாமல் இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகுதான் ஆதி திராவிட மக்களுக்கு இந்த மூன்று ஆண்டுகளில் 5 இலட்சத்து 36,000 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டு உள்ளன. மேலும் 1994-95, 1995-96-க்கு 3 இலட்சத்து 50,000 பட்டாக்கள் வழங்குவதற்காக முதலமைச்சர் அவர்கள் சிறப்பு நேர்வாக 28 கோடி ரூபாய் ஒதுக்கி தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல, எந்த அரசாங்கமும் இந்தப் பணிகளைத் துரிதப்படுத்துவதற்காக அக்கறை கொண்டதில்லை என்று தான் நான் சொல்வேன். அதன் அடிப்படையில் முதலமைச்சர் அவர்கள் இவ்வளவு பேர்களுக்கு மனைப்பட்டாக்கள் தர வேண்டுமென்று அக்கறையோடு தனி தாசில்தார்களுக்கு ஜீப்புகள் வழங்க வேண்டுமென்றும் ஆணையிட்டு, இந்த ஆண்டு, 12 ஜீப்புகள் வழங்க ஆணையிட்டு இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போல, காங்கிரஸ் ஆட்சியிலும் சரி, தி.மு.க. ஆட்சியிலும் சரி, அவர்கள் ஆதி திராவிட மக்களுடைய நலனில் அக்கறை கொண்டார்களா என்றால் இல்லையென்றுதான் சொல்வேன். முதலமைச்சர் அவர்கள் மாவட்ட ஆட்சியர்கள் மாநாட்டில் பேசுகிறபோது, ஒரு மாவட்ட ஆட்சித் தலைவர் மாணவியர் ஹாஸ்டல் தேவையென்று கேட்டபோது, அந்த மாணவியர்களுக்கு காவலாளிகள், வாட்ச்மென் இருக்கிறார்களா என்று கேட்டார்கள். வாட்ச்மென் இல்லையென்று சொன்னவுடன், தமிழ் நாட்டில்

[*1994 நவம்பர் 10*

இருக்கிற ஆதி திராவிட மாணவியர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கிற வகையில் *294* மாணவியர் விடுதிகளுக்கு உடனடியாக (மேசையைத் தட்டும் ஒலி) காவலர்களை நியமிக்க வேண்டுமென்று ஆணையிட்ட இதய தெய்வம், தமிழக முதலமைச்சர் ஆட்சிக் காலத்தில்தான் ஆதி திராவிட சமுதாயத்தினுடைய மக்கள் கோரிக்கைகள் வைக்காமலேயே, அவர்கள் உணர்வுபூர்வமாக பல சந்தர்ப்பங்களில் பேசுகிறபோதெல்லாம் எதையெதை எல்லாம் செய்ய வேண்டும் என்பதற்காகவே அறிந்து, மக்களுடைய கோரிக்கைகளை உணர்ந்து நடவடிக்கை எடுக்கிற இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக் காலத்தில், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நிறைவேற்றி வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் *11-05*

டாக்டர் ஜெ. பரந்தாமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொட்டில் குழந்தைகளை அரவணைத்துக் காத்ததைப் போல், ஆதரவற்ற ஆதி திராவிட மக்களுக்கு, பேரணாம்பட்டு தொகுதியில் 'ரெக்கார்ட் பிரேக்காக' நிறைய அளவில் பட்டா வழங்கியிருக்கிறார்கள். இந்தப் பிரச்சினையைக் கருணையுடன் ஆலோசித்து, இந்த ஆண்டே பட்டா வழங்க ஆவன செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோரிக்கை நீதிமன்றத்தில் இருக்கிற காரணத்தால் சட்டமன்ற உறுப்பினருடைய ஆர்வத்தின் காரணமாக, அதற்கு மாற்று இடமாக, அந்த இடத்திற்கு *500* அடி தூரத்தில் எதிர்ப்புறமாக லப்பை மாங்குப்பம் கிராமத்தில் புல எண்கள் 1, 4/1, 14/3, 14/4 ஆகிய நிலங்கள் தரிசாக உள்ளன. இப்புலத்தில் கிணறுகள், கட்டிடங்கள், மரங்கள் எதுவும் இல்லை. ஆயினும் இவைகள் வகைப்பாட்டில் நஞ்சையாக உள்ளன. அதற்கான நீர்வரத்துக் கால்வாய்கள் அடைபட்டுள்ளன. இந்த நிலங்களைப் பார்வையிட்டபோது, மனுதாரர்களும் உடன் இருந்து இருக்கிறார்கள். அந்த இடத்தைத் தேர்வு செய்து, மிக விரைவில் பட்டா கொடுக்கலாம். அதற்காக சட்டமன்ற உறுப்பினரும் பொது மக்களை அணுகி, அந்த இடத்தை அவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற வேண்டுகோளை வைத்து உதவ வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதன் அடிப்படையில் மிக விரைவில் பட்டா கொடுக்கப்படும்.

1994 நவம்பர் 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 100, டாக்டர் பிட்ரிக்ஸ் டி'சோசா, மாண்புமிகு பிற்படடோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர்.

100—

Establishment of Canning Industry for export of Sardines

***Q. No. 22875— Dr. Beatrix D'Souza:**

Will the Hon. the Minister for Backward Classes and Fisheries be pleased to state—

whether there is a proposal with the Government to start to Canning factory to export Sardines?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

Dr. Beatrix D' Souza: Hon. Speaker, sir, there is every indication that the food-processing sector will grow in India, following the country's major economic reforms. It is so, not only in foreign investment, but there is a major market in countries like Australia and New Zealand for canned sardines, especially in the fast-foods industry. Therefore, if the Government feels that the canning of sardines is not a viable proposition, could the Department of fisheries make available the necessary expertise to the private entrepreneurs in Tamil Nadu?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சார்டைஸ்' எனப்படும் 'சூறை' என்ற வகை மீன்களை டப்பாக்களில் அடைத்து விற்பதற்காக 1966-ஆம் ஆண்டே 2 டன் கொண்ட ஒரு தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டது. அப்படி ஆரம்பிக்கப்பட்ட சூழ்நிலையில், அந்தத் தொழிற்சாலை 'வயபிலிட்டி' இல்லாத காரணத்தால் அன்றைக்கு மூடி, தனியார் ஒருவருக்கு குத்தகை அடிப்படையிலே விட்டும்கூட, அந்தத் தொழிற்சாலையை நடத்த முடியாத சூழ்நிலையில், தற்போது அது மீன் வளக் கல்லூரிக்கு மாற்றம் செய்யப்பட்டது. இந்தச் சூழ்நிலையைக் கருத்திலே கொண்டு, எதிர்காலத்திலே பதப்படுத்துகின்ற தொழிற்சாலை குறிப்பாக மீன்கள் எல்லாம் அழியக்கூடிய அளவிற்கு சாத்தியக்கூறுகள் இருக்கின்ற காரணத்தால், —'பெரிஷபிள் கூட்ஸ்' என்று சொல்லக்கூடிய வகையில் அந்த மீன்கள் அழியக்கூடிய அளவிற்கு வாய்ப்புகள் இருக்கின்ற காரணத்தால்,—அரசே அதைச் செய்யக்கூடிய சாத்தியக்கூறுகள் இல்லை.